செய்தி குறிப்பு எண்.39 நாள்.30–4–2008

# தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் விடுக்கும் மே தின வாழ்த்துச் செய்தி

மே நாள்! மேதினி எங்கும் உழைப்பாளர் பெருமையை உரைத்திடும் திருநாள்! வயிறார உண்டு சுவைத்திடவும், வகைவகையாய் வண்ண வண்ண ஆடைகளை உடுத்தி மகிழ்ந்திடவும், விரும்பிடும் இடமெல்லாம் சுகமாகச் சென்று தங்கி, சொகுசாக மீண்டிடவும், நுகர்ந்திடும் வசதிகளுடன் குழந்தைகள் சூழக் கூடிக் களித்து வாழ்ந்திடவும் உலக மக்களுக்குத் தேவையானவற்றை உருவாக்கிடத் தினம் தினம் உழைத்திடும் தொழிலாளர்களை நினைந்து மகிழ்ந்து நன்றியுடன் போற்ற வேண்டிய பொன்னாள் இந்த மே நாள்! இந்நன்னாளில் தொழிலாளர் சமுதாயத் தோழர்களுக்கு என் இதயம் கனிந்த இனிய மே தின நல்வாழ்த்துகள் உரித்தாகுக.

1929 செங்கற்பட்டு சுயமரியாதை மாநாட்டில், "தொழிலாளர்கள் ஆற்றுகின்ற பணிக்கு ஏற்பவும், அவர்களுடைய தேவைக்கு ஏற்பவும் ஊதியம் பெற்றாக வேண்டும்; அந்த ஊதியத்தை அவர்களுக்கு வழங்கியாக வேண்டும்" என்றார் தந்தை பெரியார்.

“1889ஆம் ஆண்டு சர்வதேச சமதர்ம மாநாடு பாரிஸ் பட்டணத்தில் கூடி, மே மாதம் முதல் தேதியை உலகப் பாட்டாளி மக்களின் விடுதலை நாளாகக் கொண்டாடும்படி தீர்மானம் நிறைவேற்றிற்று. அது முதல் மே தினம் உலகிலே எல்லா நாடுகளிலும் பாட்டாளிகளின் விடுதலை நாளாகக் கொண்டாடப்பட்டு வருகிறது” என்றார் பேரறிஞர் அண்ணா.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா ஆகியோரின் கொள்கை வழிநின்று திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர் நலன் காத்திடும் பல்வேறு பணிகளைத் தொடர்ந்து நிறைவேற்றி வருகிறது.

- ❖ 1969 இல் தொழிலாளர் நலனுக்குத் தனி அமைச்சகம்;
- ❖ 1969 முதல் மே தினத்திற்கு ஊதியத்துடன் அரசு விடுமுறை;
- ❖ 1971 இல், "தொழிலாளர் நல நிதி" அதை நிர்வகித்திட, "தொழிலாளர் நல வாரியம்".
- ❖ ஒப்பந்தத் தொழிலாளர் நலனுக்கு 1971 இல் தனிச் சட்டம்;
- ❖ 1971 இல் நாடே பாராட்ட, "குடியிருப்பு அனுபோகதாரர்கள் சட்டம்"; 1,73,748 விவசாயத் தொழிலாளர்களுக்கு வீட்டுமனைப் பட்டா – வரலாற்றுச் சாதனை.
- ❖ 1972இல் தொழிலாளர்க்கும் அரசு ஊழியர்க்கு உள்ளதுபோல் "பணிக்கொடை"
- ❖ அதே 1972இல் விபத்தால் பாதிக்கப்படும் தொழிலாளர்களுக்கும் லாரி, ஆட்டோ, தனியார் கார், டாக்சி, பேருந்து ஆகியவற்றின் ஓட்டுநர்களுக்கும், கட்டடக் கட்டுமானத் தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் தகுந்த நிவாரணங்கள் வழங்கித் தொழிலாளர் குடும்பங்களின் துயர் துடைத்திட "தொழில்–விபத்து நிவாரண நிதி"
- ❖ 1973இல் தொழிலாளர் நலன் குறித்துப் பயிற்சிகள் அளித்திட "தொழிலாளர் கல்வி நிலையம்";
- ❖ 1997இல் சென்னை நேப்பியர் பூங்காவிற்கு, "மே தினப் பூங்கா" எனப் பெயர் சூட்டி, அங்கு மே தின நினைவுச் சின்னம்;

- **1997 இல் ஏழை எளிய தொழிலாளர்களின் வாழ்வு ஆதாரங்களுக்கு வழிகாணும் நோக்கில் அமைப்புசாரா தொழிலாளர் நல வாரியம்;**
- **1997ஆம் ஆண்டில் அமைத்த கோலப்பன் குழு அளித்த பரிந்துரைகளின்படி, விவசாயத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம்; 2000 ஆண்டில் "விவசாயத் தொழிலாளர் நலவாரியம்".**
- **2006இல் "தமிழ்நாடு விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் சமூகப் பாதுகாப்பு மற்றும் நலத் திட்டம்" தனி சட்டம் இயற்றி, விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்குக் கல்வி உதவி, திருமண உதவி, மகப்பேறு உதவி, ஒய்வூதியம், ஈமச் சடங்கு உதவி, விபத்துக் கால இழப்பீட்டு உதவி என்பன போன்ற பல உதவிகள்;**
- **அமைப்பு சாராத் தொழில்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி நல வாரியங்கள் ;**
- **தொழிலாளர்களுக்குத் தடையின்றி 20 சதவிகித போனஸ்; ஊக்கத்தொகை;**
- **நிலமற்ற ஏழை விவசாயத் தொழிலாளர் குடும்பங்களுக்கு இலவச நிலம்;**
- **விவசாயக் கூலிகளாகவும், வேறுபல தொழில்களில் உழைப்பாளிகளாகவும் திகழும் ஏழை எளிய கர்ப்பிணிப் பெண்களுக்கு 6000 ரூபாய் நிதியுதவி;**
- **உழைப்பாளர் சமுதாயம் அறிவியலோடு பொது அறிவை வளர்த்துக்கொள்ள இலவச வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள்;**
- **தொழிலாளர் குடும்பங்களின் பசிப்பிணி போக்கிட 2 ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி;**
- **எரிவாயு இணைப்புடன் கூடிய இலவச எரிவாயு அடுப்புகள்**

**எனத் தொழிலாளர் சமுதாயம் நலம்பெற, வளம்பெற அவர்கள் குடும்பத்தார் சுகம்பெற அடுக்கடுக்கான திட்டங்களைச் செயல்படுத்தி தொழிலாளர்களின் உரிமைகளைப் போற்றிடும் தமிழக அரசின் சார்பில் தொழிலாளர் சமுதாயத் தோழர்கள் அனைவருக்கும் என் இதயங்கனிந்த மே தின நல்வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கிறேன்.**

* * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.